# அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம்பண்ணினாள்

1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

நாமே அவைகளை நமக்காகத் தள்ளிவிட வேண்டும். எனவே நாம், "தேவனே, நீர் வந்து அவைகளை எங்களுக்காகத் தள்ளி விடும்" என்று கூற முடியாது. நாம்தான் அதை நமக்காகச் செய்ய வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# வெளிப்படுத்தின விசேஷம் 19:7

**நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-0121E –

## ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

---

53 அதாவது ஒரு மணவாட்டி இருக்கப் போகிறாள் என்பதையும், ஆகாயத்தில் ஒரு கலியாண விருந்து பரிமாறப்படப் போகிறதாயிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அது தேவனைப் போன்றே, அவ்வளவு நிச்சயமாய் இருக்கப்போகிறது, ஏனென்றால் அது அவருடைய வார்த்தை யாய் இருக்கிறது. அந்த மணவாட்டியாய் ஒன்று கூடப் போகிறவர்களே அவருடைய சபையாயிருக்கப் போகிறவர்களென்றும், அவர்களே அவருக்கு முன்பாக கரைதிறை யற்றவர்களாய் பிரசன்னமாகப் போகிறார்

கள் என்பதையும் நாம் அறிவோம். அவர்கள் இப்பொழுது தங்களை ஆயத்தம் செய்துகொள்ளும்படியாகப் பூமியின்மேல் மூலப்பொருள்களை உடையவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் கவனிப்பீர்களேயானால், "அவள் தன்னை ஆயத்தம்பண்ணினாள்" என்றே கூறப்பட்டுள்ளது.

54 அநேகர், "கர்த்தர் இந்த பொல்லாத ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடுவாரேயானால், குடிப்பழக்கத்தை அல்லது சூதாடுதலை அல்லது பொய் யுரைத்தலை அல்லது களவாடுதலை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடுவாரே யானால், நான் அவரைச் சேவிப்பேன்" என்கிறார்கள்.

55 ஆனால் அது உங்களைப் பொறுத்த தாயுள்ளது. பாருங்கள், நீங்களும்கூட ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவர்கள்

எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளு வார்கள்." ஜெயங்கொள்ளுகிறவர்கள். அதைச் செய்ய உங்களுக்கு வல்லமை உண்டு, ஆனால் அதை நீங்கள் மனப்பூர்வ மாய் விட்டுவிட வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். புரிகிறதா? "அவள் தன்னை ஆயத்தம்பண்ணினாள்." எனக்கு அந்த வசனம் பிடிக்கும்.

56 நீங்கள் பாருங்கள், தேவன் நம்மை ஒரு சிறு குழாயினூடாக ஒரு முனையில் நுழைத்துத் தள்ளி, மறுமுனையில் நம்மை வெளியே இழுத்துவிட்டு, பின்னர், "ஜெயங்கொள்ளுகிறவன் பாக்கியவான்" என்று கூற முடியாது. உங்களிடம் ஜெயங்கொள்ளுவதற்கு ஒன்றுமேயில்லா திருந்தது: அவரோ ஒரு முனையிலிருந்து மறுமுனையினூடாகத் தள்ளினார். ஆனால் நீங்களே உங்களுக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நானே எனக்கான

தீர்மானங்களை எடுக்க வேண்டும். அதைச் செய்வதில் நாம் நம்முடைய விசுவாசத் தையும், மரியாதையையும் தேவனண்டைக் காண்பிக்கிறோம்.

57 ஆபிரகாமிற்கு ஒரு குழந்தை வாக்களிக்கப்பட்டது, ஆனால் அவன் இந்த வாக்குத்தத்ததை இருபத்தைந்து ஆண்டுகளாக விடாமல் பற்றிக்கொண் டிருக்க வேண்டியதாயிற்று, அந்த இருபத் தைந்து ஆண்டுகளில் அவனுக்கு நன்மைத் தீமைகளைக் கொண்ட ஏற்றத்தாழ்வுகளும், சோதனைகளும் உண்டாயிருந்தன. ஆனால் அவனோ வாக்குத்தத்தின் வார்த் தையைப் பற்றிக்கொண்டிருந்தான்.

58 ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்பட் டிருந்த தேசம் இஸ்ரவேலுக்கு வாக்களிக் கப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் அதனுடைய ஒவ்வொரு அங்குலத்திற் காகவும் போராட வேண்டியதாயிருந்தது.

தேவன் யோசுவாவினிடத்தில் “உங்களுடைய உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் நான் உங்களுக்கு கொடுத்திருக்கிறேன்” என்றார். அவையாவும் அங்கே இருந்தன. தேசமோ அங்கே இருந்தது, தேவனோ அதை அவர்களுக்கு கொடுத்துவிட்டிருந்தார். ஆனாலும் அவர்கள் அதற்காகப் போராட வேண்டியிருந்தது.

59 தெய்வீக சுகமளித்தலைக் குறித்தும் அதே விதமாகவே உள்ளது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள தைரியத்தைப் பெற்றிருந்தால், உங்களைக் குணப்படுத்த தேவன் வல்லமையை உடையவராயிருக்கிறார். ஆனால் நீங்கள் அந்த வழியின் ஒவ்வொரு அங்குலத்திற்கும் போராட வேண்டும்.

60 உங்களை இரட்சிக்க தேவன் வியத்தகு கிருபையை உடையவராயிருக்கிறார், அவர் அதைச் செய்வார்.

ஆனால் நீங்கள் உங்களுடைய வழியின் ஒவ்வொரு அங்குலத்திற்காகவும் போராட வேண்டும்.

61 நான் முப்பத்தியொரு ஆண்டுகளாக இந்தப் பிரசங்கப் பீடத்திற்கு பின்னாக நின்று வருகிறேன். தொடர்ந்து அதனுடைய ஒவ்வொரு அங்குலத்திற்காகவும் போராடிக்கொண்டே வந்திருக்கிறேன். அது நிச்சயமாக அவ்வாறே இருக்கிறது.

62 "நாம் ஆளுகை செய்ய வேண்டுமானால், நாம் போராட வேண்டும்." ஆகையால் மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது என்பதை நாம் கண்டறிகிறோம். "நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடும்படிக்கு, நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாரமான யாவற்றையும் தள்ளிவிட சித்தமுள்ளவர்களாயிருப்

போம்.” நாமே அவைகளை நமக்காகத் தள்ளிவிட வேண்டும். எனவே நாம், “தேவனே, நீர் வந்து அவைகளை எங்களுக்காகத் தள்ளி விடும்” என்று கூற முடியாது. நாம்தான் அதை நமக்காகச் செய்ய வேண்டும்.

62-0121E – **ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்**

Rev. William Marrion Branham



சபையானது தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லையென்றால், ஆயத்தப்படுத்துவது உங்களுடைய கடமையாயிருக்கிறது. "மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள்."



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## வெளிப்படுத்தின விசேஷம் 19:7

**நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 57-0407M – **தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்**

---

63 இப்பொழுது இந்த ஜனங்கள் எகிப்திலே சுமார் நானூறு வருடங்களாய் இருந்து வந்தனர். இஸ்ரவேல் ஜனங்களின் மகத்தான பயணத்தைக் குறித்தும், எப்படியாய் அவர்களை அங்கே தேவன் எகிப்தியரிடத்தில் ஒப்புக்கொடுத்தார் என்பதையும் நாம் மிகவும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர்கள் இவர்களை தவறாக நடத்தினார்கள், ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அவர்கள் அதைச் செய்வார்கள் என்று கூறியிருந்தது.

64 இப்பொழுது ஒரு அந்நிய தேசத்திலே அவருடைய ஜனங்கள் நானூறு வருடங்களாக சஞ்சரிப்பார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார். வாக்குத்தத்தத்தின் நேரமானது நெருங்கிய பொழுது சந்திக்கும்படியான எல்லாக் காரியங்களையும் தேவன் ஆயத்தமாக வைத்திருந்தார்.

65 ஓ, நான் அதைக் குறித்து யோசிக்கும்போது, நான் அதை நேசிக்கி றேன். சரியான கடுஞ்சோதனை நேரம், அவர் ஒரு நிமிடத்தையும் தாமதப் படுத்துகிறதில்லை. அவர் எப்பொழுதுமே சரியான நேரத்தில் இருக்கிறார். நாம் மட்டும் அதைப்போன்று இருப்போ மானால் நலமாயிருக்குமே! ஓ, நாம் காரியத்தை தள்ளிவிட முயற்சிக்கிறோம். நாம் அதை நம்முடைய நேரமாக்க முயற்சிக்கிறோம். ஆனால் நம்மால் அதை ஒருபோதும் செய்ய முடியாது. தேவன்

அதை அவருடைய நேரத்தில் ஒருபோதும் செய்ய முடியாது. தேவன் அதை அவருடைய நேரத்தில் செய்கிறார். நாம் அதில் எந்த வித்தியாசத்தையும் செய்ய முடியாது.

66 நேற்றைய தினம், பக்கத்து வீட்டில் வசிக்கும் என்னுடைய சகோதரி உட்ஸ் (woods) அவர்களுடைய பின்முற்றத்தில் நின்று கொண்டு ஒரு மரத்தின்மேல் உருவாக்கிக் கொண்டிருந்த சிறிய புழுக்கூட்டை நாங்கள் கவனித்துக் கொண்டிருந்தோம். காற்றானது அதின் முன்னும் பின்னுமாக அடித்துக் கொண் டிருந்தது. அவள் புழுக்கூட்டைப் பற்றின ஒரு கட்டுரையை பாலைவனங்களின் ஓடைகளில் வாசித்துக் கொண்டிருந்தாள் என்று நான் நினைக்கிறேன். அவள் அதை சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு சிறிய புழு அங்கே உள்ளே போய், குளிரில் தன்னை பாதுகாத்துக்கொள்ளும்படியாய்

ஒரு சிறிய ஓடு ஒன்றை அதனைச் சுற்றி உருவாக்கிக் கொள்கிறது. ஆனால் அதன் நேரம் வரும்பொழுது...

67 இந்த சிறு நபரோடு இடைபட்டுக் கொண்டிருக்கிற இந்த நபர் இந்த புழு அசைந்து கொண்டும், நெளிந்து கொண் டும் இருப்பதை அவர்கள் பார்த்துவிட்டார் கள். அந்த சிறு நபருக்காக அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்களாம். எனவே அவர்கள் அதன் முனையை அறுத்துவிட்டு, அந்த சிறிய பூச்சியை வெளியே வரவிடலாம் என்று நினைத்தார் கள், ஏனென்றால் அங்கிருந்து அது வெளியே வந்தவுடன் அதற்கு இறக்கைகள் இருக்கப் போகிறது, அது உள்ளே போகும்போது ஒரு பூச்சியைப் போன்று அல்லது ஒரு சிறிய புழுவைப் போன்று சென்று மேலும் ஒரு மகிமையடைந்த நிலையைப் போன்று அது இறக்கை களோடு வெளியே வருகிறது. அது

நெளிந்து கொண்டும், இழுத்துக் கொண்டும் இடித்துக் கொண்டும், அடித்துக்கொண்டும், கடித்துக் கொண்டும் அந்த பூழுக் கூட்டிலிருந்து வெளியே வர முயற்சித்துக் கொண்டிருந்தது. அவர்கள் அதற்காக வருத்தப்பட்டார்கள். ஆகவே அதற்கு சரியாக ஒரு குறுக்கு வழி கொடுக்கலாம் என்று அவர்கள் நினைத் தார்களாம். எனவே அவர்கள் போய் ஒரு கத்தரிக்கோலைக் கொண்டு வந்து அந்த முனையை வெட்டிவிட்டார்களாம். அவர்கள் அந்த முனையை வெட்டின போது அந்த சிறிய பூச்சி வெளியே வந்தது. ஆனால் அது சரியாய் இல்லை, ஏனென்றால் அதன் சரீரத்தில் அதற்கு எவ்விதமான பெலனுமில்லையாம். அதனுடைய இறக்கைகளை அதனால் உபயோகிக்க முடியவில்லையாம்.

68 நாமும் கூட அந்த விதமாக அதைச் செய்ய முயற்சிக்கிறோம் என்று நான்

நினைக்கிறேன். "பீடத்தண்டை வாருங்கள்" என்று கூறுகிறோம். *இதைச்* சொல்லுங்கள், *அதை* அல்லது *மற்றதை.* ஜனங்களை திரும்ப தேவனிடத்திற்கு அல்லது சபைக் குள்ளாக அல்லது கிறிஸ்துவினிடத்திற்கு வரும்படியாக கொண்டுவர முயற்சிக்கி றோம். அவர்கள் அதை பூ— ஹூ (boo— hoo) என்று வெளிக்கொண்டுவர அனுமதிக் கிறோம். அவ்வளவு தான். அதனின்று வெளிவர உங்களுடைய வழியை உண்டாக்கிக் கொள்ளுகிறீர்கள். அவ்வளவுதான். நீங்கள் அவர்களுக்கு ஒரு குறுக்கு வழியைக் கொடுக்க முயற்சித்தால், அவர்களால் ஒருபோதும் நிற்கவே முடியாது. தேவன் அவர்களுக்கு இயற்கை யான வழியிலே ஒரு உண்மையான பிறப்பை கொடுக்கும் மட்டும், சரியாக அவர்களுக்கு அந்த உண்மையான பிறப்பைக் கொடுக்கும் மட்டும், அவர்கள்

போராடி, அதிலே கிரியை செய்வதைக் காணும்படியாகவே நான் விரும்புகிறேன்.

ஜனங்கள், “நல்லது, தேனே, நீ போது மான அளவு ஜெபித்திருக்கிறாய் என்று நான் நினைக்கிறேன்” என்று கூறுகிறார்கள்.

69 நீங்கள் பறப்பதற்கு ஆயத்தமாகும் வரைக்கும் நீங்கள் அங்கேயே அப்படியே தரித்திருங்கள். அதுதான் ஒரே காரியம். அதைச் செய்வதற்கு தேவன் ஒரு வழியை உடையவராயிருக்கிறார்.

70 “ஓ, நல்லது, நீங்கள் நல்லவர்களாய் இருக்க விரும்பினால் சபையை சேர்ந்து கொள்ளும்படியாய் செல்லுங்கள். அம்மா அதே சபைக்குத்தான் சென்றார்.”

71 அது அருமையாய் இருக்கலாம். ஆனால், உங்களுக்குத் தெரியும், ஒரு ஜீவனைக் கொண்டுவர அது ஒரு மரணத்தை எடுக்கிறது. நாம் மரித்தாக வேண்டும், அது மட்டுமாக, அங்கே ஒரு

புதிய ஜீவன் உள்ளே வரும்படியாக, நாம் அவ்வளவாய் மரிக்கிறோம். அப்பொழுது நம்முடைய இறக்க்கைகள் பயனுள்ள தாயிருக்கும்; நமக்கு இருக்கின்ற நம்முடைய அனுபவம் மற்றவர்களுக்கும் நமக்கும் பயனுள்ளதாயிருக்கும்.

72 இஸ்ரவேலர் ஆயத்தமாயிருக்க வில்லை. ஆனால் தேவன் ஆயத்தமா யிருந்தார். அவருக்கு மோசே என்ற பெயரில் பிறந்த ஒரு சிறு குழந்தை இருந்தது. பிள்ளைகளை வெளியே கொண்டு செல்ல நாற்பது வயதில் அவன் சரியாக அங்கே இருந்தான். ஆனால் இஸ்ரவேலரோ ஆயத்தமாயில்லை. அவர் கள் ஆயத்தமாயில்லாத காரணத்தினால் அப்பொழுது அவர்கள் இருபது வருடங் கள் அதிகமாக இல்லை நாற்பது வருடங் கள் அதிகமாக வேலை செய்ய வேண்டிய தாய் இருந்தது. நாற்பது வருடங்கள் அதிகமாக அவர்கள் எகிப்திலே கஷ்டப்பட

வேண்டியதாயிருந்தது. அவர்கள் மட்டும் ஆயத்தமாயிருந்திருந்தால், நாற்பது வருடங்களுக்கு முன்பாகவே அவர்களால் வெளிவந்திருக்க முடியும்.

73 தேவன் ஆயத்தமாயிருந்தார், ஏனென்றால் வாக்குத்தத்தின் நேரமானது நெருங்கி வந்தது. தேவன் ஜனங்களை ஆயத்தப்படுத்த அவருடைய வார்த்தையை நிறைவேற்ற அவருடைய வார்த்தையை எப்பொழுதும் தேவன் காத்துக்கொள்ளும்படியாக பூமிக்கு ஒரு தூதனை அனுப்பினார். அவர் மோசே யினிடத்தில், " என் ஜனங்ளுடைய உபத்திர வங்களை நான் கண்டு, ஆளோட்டிகளி னிமித்தம் அவர்களுடைய பெருமூச்சு களையும், கூக்குரல்களையும் கேட்டேன். நான் நினைவு கூர்ந்தேன். நான் என்னுடைய வார்த்தையை, என்னுடைய வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தேன்" என்றார். நானூறு வருடங்கள் கடந்தன,

ஆனால் தேவன் அப்படியிருந்தும் அவருடைய வார்த்தையை நினைவு கூர்ந்தார்.

74 ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால் தேவன் இன்னமும் அவருடைய வார்த்தையை நினைவு கூருகிறார். "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." வாக்குத்தத்தத்தின் நேரமானது நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

75 கவனியுங்கள், அவர் பேசிக்கொண்டும், ஆயத்தமாக்கிக் கொண்டும் இருக்கையில் நானூறு வருடங்கள் கடந்து போயின. தேவனோ அவருடைய வார்த்தையோடு சரியான நேரத்தில் இருந்தார். பின்னர் நாற்பது வருடங்கள் அதிகமான

பின்னரே... என்பதையே நான் கண்டறிந்தோம்.

76 இந்த வார்த்தைகளைக் கூறும் படியாக சரியாக நான் இங்கே ஒருக்கால் நிறுத்தலாம். இப்பொழுது நீங்கள் இதை நான் சொன்னதாக கூறலாம். ஏனென்றால் அங்கே பின்னாக அது ஒலிப்பதிவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறி வேன். கர்த்தராகிய இயேசுவினுடைய வருகை முன்னமே நடந்திருக்க வேண்டி யதாய் இருக்கிறது என்றே... நாம், நான் விசுவாசிக்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்பே இது நடந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். ஆனால் அதற்கு காரணம் என்னவென்றால், அவரை சந்திக்க சபையானது ஆயத்தமாயில்லை.

77 இப்பொழுது, நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களேயானால், அவர், “நோவா வின் நாட்களில் நடந்தது போல இருக்கும்”

என்றார். ஜலப்பிரளயத்திற்கு முன்பாக, நோவாவின் நாட்களில் அது எப்படி இருந்திருக்கும். ஒருவரும் கெட்டுப்போகா மல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டு மென்றே தேவன் விரும்பினார். ஆகையி னால் அவர் நீடிய பொறுமையாயிருந்தார். வெள்ளத்தின் நாட்கள் அதன் காலத்தையே கடந்து போயிருந்தது. எகிப்திலும் அது கடந்ததாகவே இருந்தது. உங்களுக்கு அது புரிகின்றதா? இப்பொழுது இந்த ஜலப் பிரளயத்தின் அழிவானது, நியாயத் தீர்ப்பில் உண்டான அழிவானது காலங் கடந்ததாயிருந்தது. எகிப்திலிருந்து வெளியே வந்ததும், காலம் கடந்ததா யிருந்தது, நாற்பது வருடங்கள் அதிகமான காலமாயிருந்தது.

78 ஆனால் தேவனோ தீர்மானமுடைய வராய் இருந்தார். அவருடைய வார்த்தை அவரிடத்திற்கு திரும்பாது என்று தேவன் தீர்மானமுடையவராய் இருந்தார்.

அவருடைய வார்த்தையை அவர் காத்துக் கொள்ளப் போவதாக இருந்தார். அவருடைய வார்த்தை அவர் காத்துக் கொள்ள வேண்டும். அவர் தேவனாய் இருப்பதால் அவர் அதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு காரியத்தின் மாற்றத்தையும் அவர் செய்ய வேண்டியதாயிருந்தாலும், கிருபையினால் அதை அவர் செய்வார்.

79 அந்தக் காரணத்தினால்தான் நான் சொல்லுகிறேன்... சபையானது தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லையென்றால், ஆயத்தப்படுத்துவது உங்களுடைய கடமையாயிருக்கிறது. "மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள்." வஸ்திரத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டாயிற்று. அவைகள் ஆயத்தமாய் இருக்கின்றன. ஆனால் வஸ்திரங்களை அணிந்து கொள்ள நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் "சபை தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டாள்."

80 இப்பொழுது சகோதரரே செவி கொடுங்கள். சபையானது ஆயத்தப்பட வில்லையென்றால், தேவன் இந்த கல்லு களினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார். இந்த பரிசுத்த ஜனங்கள் தங்களை நேராக் கிக் கொள்ளவில்லையென்றால், மீண்டு மாக காப்புக் கவசத்திற்குள்ளாக சென்று சுவிசேஷத்திற்கு திரும்பிச் செல்லுங்கள். தேவனால் எழுப்ப... அவர் கத்தோலிக் கர்களை, பிரஸ்பிடேரியன்களை அல்லது அவர் விரும்புகிற என்னத்திலிருந்தாவது கொண்டு வரமுடியும். அவர் அதைச் செய்வார்.

81 ஒரு சில வாரங்களுக்கு முன்னர் ஒஹையோவிலுள்ள (Ohio) லைமாவில் (Lima) அநேகர், உங்களில் சிலர், இப்பொழுது இங்கே உட்கார்ந்து கொண் டிருக்கிறவர்கள் அங்கே இருந்தீர்கள். பிரஸ்பிடேரியன்கள், பாப்டிஸ்ட் மற்றும்

மெத்தோடிஸ்டுகள் மத்தியில் அவர்கள் நேராக பீடத்தண்டை ஓடிவந்தார்கள். அநேக முறைகளில் பரிசுத்த ஜனங்கள் செய்கிறதைக் காட்டிலும் மிகச் சிறப்பாக அவர்கள் சுவிசேஷத்திற்கு ஆதரவளித்து ஏற்றுக் கொண்டனர். நாம் இதை இப்பொழுதுதான் சரியாக நம்முடைய சிந்தையிலே பெற்றிருக்கிறோம். அதாவது நாம் அவருடைய பரிசுத்த நாமத்தால் அழைக்கப்பட்டு, அதை அந்தவிதமாக போக அனுமதித்தோம். அவருடைய நாமத்தினாலே அழைக்கப்பட வேண்டி யவர்கள் இன்னும் அதிகமாகத்தான் இருக்கிறார்கள் என்பதே அதன் அர்த்த மாகிறது. உனக்காக மரித்தவருக்காக ஜீவிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகிறது. அது ஒரு ஜீவியமாய் இருக்கிறது. தேவனுக்கென்று அர்ப்பணிக்கப் பட்ட ஒரு ஜீவியமாய் இருக்கிறது. ஓ, நாம்

வேதத்திற்கு திரும்பிப் போவது அவ்வளவு அவசியமாய் இருக்கிறதே!

82 இங்கே சில இரவுகளுக்கு முன்னர், அங்கே... உயரே நடந்த கூட்டங்களில் நான் லூதரன்களிடம் சொல்லிக் கொண்டிருந் தேன். இப்பொழுது அவர்கள் சரியாக, “இந்த லூதரன்களைப் போன்று எங்களுக்கு இன்னும் ஐந்து கல்லூரிகளை கொடுங்கள், அவர்களில் எழுபத்தியொருபேர் அந்த நாளன்று கல்லூரியில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்” என்று கூறியிருக் கிறார்கள். அப்பொழுது நான் அங்கே இருந்தேன். “எங்களுக்கு அதைப் போன்ற இன்னும் ஐந்து பள்ளிகளைக் கொடுங்கள். கர்த்தர் பத்து வருடங்கள் தாமதித்தால் நாங்கள் முழு லூதரன் சபைகளையும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர் களாக வைத்திருப்போம்” என்றனர். ஓ, என்னே! நிச்சயமாக.

83 தேவன் இந்தக் கல்லுகளினாலே (உண்டுபண்ண) வல்லவராயிருக்கிறார். அவர் கறை, திரை, குறையற்றதாய் நிலைநிற்கும் ஒரு சபையை உடையவராய் இருக்கப்போகிறார். அவருடைய கிருபை எல்லாவற்றிற்கும் போதுமானதாய் இருக்கிறது. அவரால் அதிகமாயும் அபரிமிதமாயும் செய்ய முடியும்.

57-0407M – **தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்**

Rev. William Marrion Branham



# இந்நாட்களில் ஒன்றில் நாம் பறந்து சென்று விடுவோம். ஆயத்தமாயிருங்கள்!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: **60-1231 — வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் I**

---

85 சகோதரனே, "உருளும் பரிசுத்தர், பெந்தெகோஸ்தேயினர்" என்றெல்லாம் பரிகசிக்கிறார்களே... இந்நாட்களில் ஒன்றில்... நாம் காத்துக் கொண்டு இருக்கிறோம், நமக்கு இன்னும் சிறிது நேரம் உள்ளது. அவர்கள், "ஆ, அதெல்லாம் ஒன்றும் பெரிய வித்தியாசம் இல்லை" என்று கூறுகிறார்கள். கவலைப்பட வேண்டாம். நமக்கு இன்னும் சிறிது நேரம் உள்ளது. அவர் வாக்குரைத்தப்படி அந்த நொடிப்பொழுதில் அவர் இங்கே இருப்பார்.

இந்நாட்களில் ஒன்றில் நாம் பறந்து சென்று விடுவோம். ஆயத்தமாயிருங்கள்! கலியாண வஸ்திரம் தரித்தவர்களாயிருங்கள். எல்லாக் கொடுமையும் உங்கள் இருதயத்தைவிட்டு அகற்றி விடுங்கள். அதாவது ஒவ்வொரு காரியமும்...

86 இவ்வேதவாக்கியம் எவ்வாறு இங்கே வாசிக்கப்படுகிறது என்பதை கவனியுங்கள்.

*நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று*

*சொல்லக்கேட்டேன்.* (புரிந்து கொண்டீர்களா?)

*சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.* (தேவனுக்கு ஸ்தோத்திரம்!).

*பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.*

87 எனவே இந்நாட்களில் ஒன்றில், இனிமை நிறைந்த அந்த எதிர்வரும் காலத்தில், ஆகாயத்தில் ஒரு சந்திப்பை உண்டாக்கப் போகிறது. உ!—ஊ. ஆயத்தமாக நிலைத்திருங்கள்! உங்களை ஆயத்தமாக்கிக் கொள்ளுங்கள்! எல்லா கெட்ட எண்ணங்களையும் உங்கள் இருதயத்தை விட்டு அகற்றி சுத்தம் செய்து கொள்ளுங்கள். அது எவ்வளவு இருளாய் தோன்றினாலும், “நீங்கள் ஒரு தவறு செய்து விட்டீர்கள்” என்று எத்தனை பேர்கள் உங்களை நகைத்து, கேலி செய்து கூறினாலும், அதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம், தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். பரிசுத்தமாக ஜீவித்து,

தேவனுக்காக ஜீவியுங்கள். தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள், அந்த வேளையானது வரும்.

## 60-1231 — வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் I

Rev. William Marrion Branham



# அவருடைய மனைவியாவதற்கு அவள் எவ்விதம் தன்னை ஆயத்தப்படுத்தினாள்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: **65-01-24 பிரசவ வேதனை**

காலத்தின் முடிவில், "அவருடைய மனைவி தன்னை ஆயத்தப்படுத்தி னாள்" என்று வேதம் கூறுகிறது.

அவருடைய மனைவியாவதற்கு அவள் எவ்விதம் தன்னை ஆயத்தப் படுத்தினாள்? அவள் என்ன செய்கி றாள்? எத்தகைய வஸ்திரத்தை அவள் தரித்திருந்தாள்? அவருடைய சொந்த வார்த்தையை. அவள் அவருடைய நீதியில் தரிப்பிக்கப்பட்டிருந்தாள். அதுதான் அது. அது சரியே. பாருங்கள்?

உலகத்தோடு அல்லது உலகத்தின் காரியங்களோடு காலத்தை வீணாக்காமலிருக்கிற ஒரு மணவாட்டிக்காகவே அவர் வருகிறார். அவள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் கழுவப்பட்டிருக்கிறாள். அவள் தன்னுடைய—தன்னுடைய அன்பை அவருக்கு மாத்திரமே பிணையமாக வைத்திருக்கிறாள். உலகத்தின் அன்போ அவளுக்கு மரித்துப் போய்விட்டது. “ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.”



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62–0121E —
## ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

216 வேளையானது வந்துவிட்டது. “அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.” ஓ! “தன்னை ஆயத்தம்பண்ணினாள்.” அவள் இந்த எல்லாக் காரியங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டாள். நினைவிருக்கட்டும் எஸ்தரோ தெரிந்து கொள்ளப்பட்டாள், மற்றவர்களோ புறக்கணிக்கப்பட்டனர். மீண்டும் பிறந்து, தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அந்நாளில் தெரிந்து கொள்ளப்பட்டு, அவர்களுடையத் தலையின்மேல் மகிமை யின் கிரீடம் சூட்டப்படும். மற்றவர்களோ புறக்கணிக்கப்படுவர்.

217 நான் நடைபெற்றிருந்த ஒரு சிறு காரியத்தை உங்களுக்குக் கூறட்டும்.

நீங்கள் அறிந்துள்ளபடி நான்—நான், நான் ஒரு மிஷினெரியாய் சுவிசேஷப் பணியினை செய்து, மிஷனெரி ஊழியத்தில் கிட்டத்தட்ட கடல் கடந்து உலகத்தை ஏழுமுறை சுற்றி வந்திருக்கிறேன். இங்கே அண்மையில் ரோமபுரி பட்டிணத்தில் நடந்த சம்பவம், ரோமபுரி கலைத்திறன் வாய்ந்த தான ஒரு மகத்தான பட்டிணமாயிருக் கிறது. அவர்கள் அங்கு ஓர் ஓவியப் பள்ளியினை வைத்திருந்தனர். எனவே படங்களுக்கு வண்ணந்தீட்டுதலைக் கற்றுக்கொள்ள ஒவ்வொரு வருடமும் நம்முடைய அமெரிக்க இளைஞர்கள் பலர் ஒரு வருட அல்லது இரு வருட காலப் பயிற்சியினை ஓவியத்தில் எடுத்துக் கொள்ள அங்குச் செல்வர். அந்தச் சம்பவம் எனக்கு கூறப்பட்டிருந்தபடிப் பார்த்தால், ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஓர் அமெரிக்க வாலிபக் குழு அங்கு வந்திருந் ததாம். அவர்கள் அங்கு சென்றவுடனே,

அவர்கள் ஒழுக்கக்கேடான கீழ்த்தரமான வற்றை செய்பவராகிவிடுகிறார்கள். அவர்கள் ரோமபுரியில் இருக்கும்போது, ரோமபுரியர் செய்வது போன்றே இவர்களும் செய்கிறார்கள். அதாவது வெளியே சென்று மது அருந்துதல், தங்களை அரைகுறை நிர்வாணிகளாக்கிக் கொள்ளுதல் மற்று முள்ள ஒவ்வொரு காரியத்தையும் பையன் கள் மற்றும் பெண்கள் இருவருமே தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

**218** அங்கே ஒரு குறிபிட்டப் பள்ளி இருந்தது. இந்தப் பள்ளிக்குத்தான் இந்த அமெரிக்க வாலிபர் குழு வந்திருந்தது. ஏறக்குறைய அவர்கள் ஒவ்வொருவரும் அதேக் காரியத்தையே செய்திருந்தனர். ஆனால் ஒரு சிறு வாலிபப் பெண்ணோ, அவள் அதை சகித்துக்கொள்ள மனமில்லா திருந்தாள். அவளும் அதில் தங்கியிருந் தாள். ஆனால் அவர்கள் எல்லோருமே

வெளியே மது அருந்திக்கொண்டிருக்கும் போது, இவள் மட்டும் இரவு நேரத்தில் படிப்பாள். பகல் நேரத்தில் அவள் பணி புரிந்தும், படித்தும் வந்தாள். எனவே அவள் அந்த முழு பள்ளியின் பரியாச நகைப்புக் கிடமானவளாக இருந்தாள். அவள் தன்னை ஒரு நாணயமிக்கப் பெண்மணி யைப் போன்றே தன்னை நடத்திக்கொண் டாள். அங்கே அவளைச் சுற்றிலுமிருந்த வாலிப ரோமப் பையன்களோ அவளை வெளியே அழைத்துச் செல்ல முயற்சித்த போதும், அவளோ அதற்கு மறுத்து விட்டாள். போகவில்லை, ஐயா. அவள் தன்னுடைய பாடங்களோடு, சரியாகக் கூறினால் வரையவும், வண்ணந்தீட்டவுங் கற்றுக்கொண்டதோடு சரியாக தரித்திருந் தாள். அவள் அதனோடு மட்டுமே தரித்திருந்தாள்.

**219** முடிவிலே அந்த இடத்தில் காவல் புரிந்து வந்த ஒரு வயோதிக காவலன் அவள் மிகவும் வித்தியாசமாயிருந்ததைக் கண்டு, அவளையே தொடர்ந்து கவனித்து வந்தார். அவர் ஒரு ரோமன் கத்தோலிக்க னாயிருந்தபோதிலும் அவள் தன்னை எப்படி நடத்திக்கொண்டாள் என்று பார்த்து, அவளையே, தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் மாலை அந்த வாலிபப் பெண் அவர்கள் வைத்திருந்த அந்தப் பள்ளியில் அவள் தங்கியிருந்த ஓவியக்காரர்களின் அறையிலிருந்து வெளியே பள்ளிக்கூட மைதானப் பூங்கா விற்கு வந்து, பின்னர் அங்கிருந்து சற்று வெளியேறி அங்கிருந்த ஒரு குன்றின் உச்சியை நோக்கியவாறேச் செல்ல, சூரியனோ அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அவளோ அங்கு அழகிய, தெளிவான முக ஒப்பனையற்ற முகத்தோடு, தன்னுடையத் தலைமுடி தொங்கிக் கொண்டிருக்க

சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தத் திசையை நோக்கியவாறே அந்தவிதமாக பார்த்துக்கொண்டிருந்தாள்.

**220** இந்த வயோதிக காவலரோ அங்கே முற்றத்திலிருந்து கொண்டு அவளை துருவி ஆராய்ந்து பின்தொடர்ந்து கொண்டிருந்தார். அவர் துருவி ஆராய்ந்திருந்த படியால், அவர் அந்தப் பெண்ணையே தொடர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். ஏதோ ஒன்று அவரிடத்தில், “போய் அவளிடத்தில் பேசு” என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தது. ஆகையால் அவர் தன்னுடையப் பிரம்புத் தடியை கீழே வைத்துவிட்டு, வேடிக்கையாய்த் தோற்றமளிக்கும் தன்னுடைய தொப்பியைக் கழற்றிவிட்டு, அந்த வாலிபப் பெண்மணி இருந்த இடத்திற்கு நடந்து சென்றார். பின்னர் அவர் தன்னுடையத் தொண்டையைக் கனைத்து குரலை சரிப்படுத்தினார்.

அப்பொழுது அவள் திரும்பிப் பார்த்தாள். அதற்கு அவரோ, “சிறு பெண்ணே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்றார்.

அப்பொழுது அவளோ, “சரி ஐயா, பரவாயில்லை” என்றாள்.

221 அவள் அழுதுகொண்டிருந்ததை அவர் கவனித்திருந்தார். மற்றெல்லாருமே அந்த இரவு ஒரு பெரிய குடிவெறியாட்டத் திற்காக வெளியில் இருந்தனர். அப்பொழுது அவர், “பெருமதிப்பிற்குரிய சீமாட்டியே, நான் உங்களிடத்தில் பேசப் போவதை சரியான விதத்தில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்பு கிறேன்” என்று கூறினார். மேலும் அவர் தொடந்து, “நீங்கள் இங்கே ஏறக்குறைய இரண்டு வருடங்களாக இருந்து வருகிறீர் கள். நீங்கள் வந்த குழுவினரை நான் கவனித்து வந்திருக்கிறேன். அவர்களோ

தொடர்ந்து வெளியே விருந்துகளுக்குச் சென்றுவிட்டு எப்போதுமே இரவு நேரத்தில் குடித்துவிட்டு, தங்களுடைய ஆடைகளை அரைகுறையாக களைந்துகொண்டு உள்ளே நுழைவார்கள். ஆனால் நீங்களோ அப்படிப்பட்ட விருந்துகளில் கலந்துகொள் ளுவதில்லை என்பதை நான் கவனித்து வந்தேன்” என்று கூறினார். அவர் தொடர்ந்து, “நீங்கள் எப்பொழுதுமே சமுத் திரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப் பதைப் போன்றுள்ளதையும் நான் கவனித் தேன். ஒவ்வொரு மாலையும் நீங்கள் இங்கு நடந்து வந்து, இங்கு நின்று சூரியன் அஸ்தமிப்பதை கவனிக்கிறீர்களே” என்றார். மேலும், “அதற்கு காரணம் என்ன?” என்று கேட்டார். அதன் பின்னர் அவர், “நானோ வயோதிகன். ஆனாலும் உங்களுக்கும் மற்றவர்களுக்குமிடையே உள்ள இந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் என்ன என்பதைக் குறித்து

அறிந்துகொள்ள நான் ஆர்வமுள்ளவனாயிருக்கிறேன்" என்று கூறினார்.

222 அப்பொழுது அவளோ, "சரி, ஐயா" என்றாள். அதன்பின்னர் அவள், "ஐயா, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்த போது, நானோ என்னுடைய வீட்டை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தேன்" என்றாள். மேலும் அவள், "அந்த சூரிய அஸ்தமனத்திற்கு அப்பால் உள்ள இடத்தில்தான் என்னுடைய தாய்நாடு உள்ளது" என்றாள். அவள் தொடர்ந்து, "அந்த தேசத்தில் ஒரு குறிப்பிட்ட மாநிலம் உள்ளது. அந்த குறிப்பிட்ட மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட பட்டணம் அங்கு உள்ளது. அந்தக் குறிப்பிட்டப் பட்டிணத்தில் ஒரு குறிப்பிட்ட ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் ஒரு குறிப்பிட்ட ஒரு பையன் இருக்கிறான்" என்று கூறினாள். மேலும், "அவனும் கூட ஓர் ஓவியனாயிருக்கிறான்.

நான் இங்கு வருவதற்கு புறப்பட்டபோது, நான் என்னுடைய அன்பை அவனுக்கு பிணையமாக வைத்துவிட்டேன். நாங்கள் ஒருவருக்கொருவர் நிச்சயிக்கப்பட்டிருக்கி றோம்” என்று கூறினாள்.

**223** அவள், “மற்றவர்கள் என்ன செய்கி றார்கள் என்பது ஒரு பொருட்டல்ல, அதில் எனக்கு சம்மந்தங்கிடையாது” என்று கூறினாள். மேலும் அவள், “நான் உண்மையாயும், சரியாயும் ஜீவிப்பதாக வாக்களித்துள்ளே” என்றாள். தொடர்ந்து அவள், “அந்த மிகப்பெரிய செட்டைக ளுடைய ஆகாய விமானம் என்னைக் கொண்டுச் சென்று சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள அந்த விமான நிலையத்தில் என்னை இறக்கிவிடும்போது, அங்கே அவன் என்னை சந்திக்க வரும் நாளையே நான் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அதற்காகவே ஆவல் கொண்டிருக்கிறேன்.

அவன் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறான். எனவே நாங்கள் அந்தத் தேசத்தில் ஒன்று சேர்ந்து வாழுவோம்.” என்று கூறினாள்.

224 எனவே “அந்தக் காரணத்தினால் தான் நான் அந்தவிதமாக நடந்துகொள்கிறேன். நான் வாக்களித்துள்ள அந்த ஒரு பையனுக்காக உண்மையாயிருக்கிறேன். அவனும் எனக்கு அளித்துள்ள வாக்குறுதிக்கு உண்மையாயிருக்கிறான்” என்று கூறினாள். மேலும், “நான் அவ்வப்போது அவனைக் கேட்டு விசாரித்து அவனுக்கு கடிதம் எழுதுகிறேன், இவ்வாறு நாங்கள் ஒருவருக்கொருவர் கடிதத் தொடர்பு கொண்டுள்ளோம். நாங்கள் இன்னமும் எங்களுடைய உறுதிமொழி கூற்றுகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு நாங்கள் சந்திக்கப்போகும் அந்த

நாளுக்காகவே காத்துக்கொண்டிருக்கிறோம்” என்று கூறினாள்.

**225** ஓ, உலகத்தின் காரியங்களிலிருந்து விலகியிருக்கும் ஓர் உண்மையான கிறிஸ்தவனுக்கு அது எப்படிப்பட்ட நல்வாழ்வைப் பெற்றுத்தரும். என்றோ ஒரு நாள் ஒரு புறாவின் சிறகுகளின் மேல் துறைமுகத்திற்கு வரப்போகிறதைக் குறித்தே நீங்கள் பேசுகிறீர்கள். உலகத்தோடு அல்லது உலகத்தின் காரியங்களோடு காலத்தை வீணாக்காமலிருக்கிற ஒரு மணவாட்டிக்காகவே அவர் வருகிறார். அவள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் கழுவப்பட்டிருக்கிறாள். அவள் தன்னுடைய —தன்னுடைய அன்பை அவருக்கு மாத்திரமே பிணையமாக வைத்திருக்கிறாள். உலகத்தின் அன்போ அவளுக்கு மரித்துப் போய்விட்டது. “ஆட்டுக்குட்டியான

வருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.”

## 62–0121E — ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

Rev. William Marrion Branham

---



**அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி, வரப்போகும் ஒரு நாளில் பறந்து சென்று இயேசுவின் கரங்களையடைவாள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: **63-03-23 ஆறாம் முத்திரை**

---

68 பாருங்கள், ஏனெனில், அவள், அவளிடத்தில் (மணவாட்டியிடத்தில்) ஒரு பாவமுமில்லை (She has not one sin). அவளுக்கு விரோதமாக ஒரு காரியமுமில்லை. தேவனுடைய கிருபை அவளை மூடிக்கொண்டிருக்கிறது. வெண்மையாக்கும் திரவம் அவள் பாவமனைத்தையும் அறவே அகற்றி விட்டது. அதைக் குறித்து இனி நினைக் கப்படுவதும் இல்லை. அவள் தேவ னுடைய பார்வையில் பரிசுத்தமுள்ள வளாய், பரிபூரணமானவளாய் இருக்கி றாள். ஓ, இது மணவாட்டியை முழங்காற்படியிட்டு தேவனிடம் கதற செய்யவேண்டும்.

69 ஒரு கதை இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. உங்கள் சமயத்தை வீணாக்குகிறேன் என்று எண்ணவேண்டாம். நான்... இன்று பேச வேண்டிய பொருளைத் தொடங்குவ தற்கு ஏற்ற ஆவியின் நிறைவு வரும் வரை, நான் ஆரம்பத்தில் இவ்விதம் பேசிக்கொண்டேயிருக்க வேண்டும்.

70 இது ஒரு- இது ஒரு புனிதமான காரியமாயுள்ளது. பாருங்கள்? அது என்னவென்று தேவனைத் தவிர வேறொருவரும் அறியார். நாம் வாழும் இந்தக் கடைசி நாள் வரைக்கும் அது வெளிப்படாது என்று வேதத்தில் நிரூபிக் கப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் உண்மை. புரிகிறதா? இதுவரை ஜனங்கள் அது என்னவாயிருக்கு மென்று ஊகித்து வந்திருக்கின்றனர்.

ஆனால் இப்பொழுது நாம் அதை அப்படியே சத்தியமாக, நிரூபிக்கப்பட்ட சத்தியமாகப் பெறவேண்டியவராயிருக்கி றோம். பாருங்கள்? கவனியுங்கள்.

71 இப்பொழுது, மேற்கு பாகத்தி லுள்ள ஒரு பெண் எப்படி அன்பு கொண்டாள் என்றால், ஒரு வாலிப மனிதன் அவள்மேல் அன்பு கொண் டான். அவன் கால்நடை வாங்கும் ஆர்மர் நிர்வாக முதலாளியின் மகன். அவர்கள் ஒரு ஒரு பெரிய...

72 ஒரு நாள் அந்த முதலாளி வர, அவனோடு அவனுடைய மகன் பெண் கொள்வதற்கென சிக்காகோவிலிருந்து வந்திருந்தான். அவர்கள் மேற்கத்திய எல்லையிலிருந்து வரவேற்றனர். எல்லாப் பெண்களும் அவனைக் கவர்ச்சிக்க எண்ணி, பழங்காலத்தில் மேற்கத்திய

பாகத்தில் அணியும் பிரத்யேகமான ஆடைகளை அணிந்துக் கொண்டு அழகாகக் காணப்பட்டனர். ஏனென்றால் அவன் முக்கியமான மனிதருடைய பையனாயிருந்தான்.

73 மேற்கு பாகத்தில் அவர்கள் இவ்விதமாக செய்கின்றனர். இவ்வித மாக சுவாரஸ்யமான ஒரு சம்பவம் அங்கு நிகழ்ந்தது. அதாவது, சகோதரன் மகியர் அவர் இங்கிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அவர் மேற்கத்திய ஆடைகளை அணிந்துகொள்ளாததன் காரணத்தினால் அவர்கள் அவரைப் பிடித்து சிறையிலடைத்தனர். அதன் பின்னர் காங்ரூ நீதிமன்றத்தில் அவரை நிறுத்தி அபராதமிட வைத்தனர். அதன் பின்னர் அவர் மேற்கத்திய ஆடைகளை வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்தம்

செய்யப்பட்டார். அங்குள்ளவர்கள் துப்பாக்கிகளை ஆடையில் தொங்க விட்டவாறு, அந்த அளவு நீளமாக தொங்கிக்கொண்டிருக்க, அவர்கள் நடந்து வருவதை நான் கண்டேன். பழங்காலத்தவர் அந்நாட்களில் வாழ்ந்தது போன்று அவர்களும் வாழத் தலைபடுகின்றனர். பாருங்கள்?

74 அவ்வாறே கென்டக்கி (Kentucky) நாட்டிலும், கிழக்கு பாகத்திலிருந்த ரென்ஃபுரோ பள்ளத்தாக்கில் இருந்த பழங்காலத்தவர் வாழ்ந்தது போன்று அவர்களும் வாழத்தலைபடுகின்றனர். ஏதோ ஒன்று அவர்கள் அவ்விதம் செய்யக்காரணமாயுள்ளது.

75 ஆனால் பழங்காலத்தவர் கடைபிடித்திருந்த மூல சுவிசேஷத்தைக்

கைக்கொள்வது மாத்திரம் உங்களுக்குப் பிடிக்கவில்லை. நவீனமான ஒன்றைக் கைக்கொள்ள நீங்கள் விரும்புகின் றீர்கள். நீங்கள் பாருங்கள், அது எதைக் காண்பிக்கிறதெனில், நீங்கள் நீங்கள். அங்கே...

76 ஒரு மனிதன் தவறு செய்யக் காரணம் யாது? அவன் குடிப்பதற்கும், ஒரு ஸ்திரீ தவறு செய்வதற்கும் காரணம் என்ன? ஏனெனில் அவன் முயற்சி செய்வது. அவனுக்குள் ஒருவித தாகம் ஏற்படுகின்றது. அவர்கள் அந்த பரிசுத்த தாகத்தை உலகத்தின் காரியங்களி னால் தணித்துக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரே அந்த விதமாக தாகத்தை உண்டாக்குகிறார். அந்தக் காரணத்தினால்தான் நீங்கள் ஏதோ ஒன்றுக்காக தாகமடைகிறீர்கள்.

அதன் மூலம் நீங்கள் தேவனிடம் திரும்பவேண்டும். பாருங்கள்? ஆனால் உலக காரியங்களின் மூலம் அதைத் தீர்த்துக்கொள்ள உங்களுக்கு எவ்வளவு தைரியம்! உங்களுக்குள்ள ஏதோ ஒன்றிற்காக ஏற்படுகின்ற அந்த தாகத்தை, அந்தப் பரிசுத்த தாகத்தை, உலகத்திற்குத் திரும்பி, உலகத்தின் காரியங்களால் அதை தீர்க்க முயற்சிக்க, அவ்வாறே உங்களுக்கு உரிமையில்லை. நீங்கள் அதைச் செய்ய முடியாது. அந்த தாகத்தைத் தீர்க்க ஒருவர் மாத்திரம்தான் இருக்கிறார். அவர் தான் தேவன். உங்களை அவ்வித மாகவே அவர் சிருஷ்டித்துள்ளார்.

77 ஆகவே, அந்தப்-அந்தப் பெண் கள் எல்லாரும் அந்த வாலிபனைக் கவர்ச்சிக்க மேற்கத்திய பாகத்தில்

அணிந்துகொள்ளும் உடைகளை உடுத்தியிருந்தனர். அந்த வாலிபன் கிடைத்துவிடுவான் என்று ஒவ்வொரு வரும் நம்பியிருந்தனர்.

78 ஆனால் அந்த ஸ்தலத்தில் அந்தப் பெண்களின் சொந்தக்காரப் பெண் ஒருவன் இருந்தாள். அவள் ஒரு அனாதை. இந்தப் பெண்கள் அனை வருக்காகவும் அவள் வேலை செய்து கொடுத்து வந்தாள், ஏனெனில் அவர்கள் நகங்களில் வர்ணம் தீட்டி யிருந்ததால், பாத்திரங்களைக் கழுவி அவைகளைப் பாழாக்கிக்கொள்ள அவர் கள் விரும்பவில்லை. ஆகவே அந்தப் பெண் எல்லா கடினமான வேலைகளை யும் செய்தாள்.

79 அந்த வாலிபன் வந்தபோது, மேற்கத்திய பாகத்தின் சம்பரதாயத்தின்

படி, அவர்கள் துப்பாக்கிகளை மேல் நோக்கியவாறு சுட்டு அவனை வரவேற்ற னர். அன்றிரவு பழங்காலத்தவர் ஆடினது போன்று நடனங்களை அவர் கள் ஆடினர். அந்த ஸ்தலத்திலிருந்த அனைவரும் நடனத்தில் கலந்து கொண் டனர். இந்த ஆர்ப்பாட்டம் இரண்டு மூன்று நாட்களாக நடந்து வந்தது.

80 ஒரு நாளிரவு அந்த வாலிபன் சற்று இளைப்பாறுவதற்கென நடன மாடும் ஸ்தலத்தை விட்டு வெளியே வந்து மாடுகள் அடைக்கப்பட்டிருக்கும் பட்டியை நோக்கி நடந்தான். அங்கு கந்தை உடுத்தியிருக்கும் இந்தப் பெண் ணைக் கண்டான். பாத்திரங்களைக் கழுவுவதற்கென தண்ணீர் நிரம்பின பாத்திரத்தை அவள் கையில் பிடித்து

இருந்தாள். அப்பொழுது அவன், "நான் இவளை இதுவரை கண்டதில்லையே. அவள் எங்கிருந்து வருகிறாள் என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே” என்று எண்ணினான். எனவே அவன் அங்கு பின்பக்கமாக அங்கிருந்த மாடுகள் அடைக்கப்பட்டிருக்கும் பட்டியை நோக்கியவாறு இருந்த வழியாக நடந்து வந்து அவளை சந்தித்தான்.

81 அவள் வெறுங்காலில் இருந்தாள். அவள் நின்றாள். அவனை யார் என்று கண்டுகொண்டாள். அவள் வெட்க முற்று அவள் முகத்தை தாழ்த்திக் கொண்டாள். அந்த மகத்தான நபர் யார் என்று அவள் அறிந்து கொண்டாள். அவள் அந்தப் பெண்களுக்கு சொந்த காரியாக இருந்தாள். அவர்களுடைய தகப்பனார் அந்த நிறுவனத்தில் தொழி

லாளர் மேன்முறையாளராக வேலை பார்த்து வந்தார். அவள் தரையையே நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் வெறுங்காலில் இருந்ததற்காக மிகவும் வெட்கப்பட்டாள்.

82 அவன் “உன் பெயர் என்ன” வென்று கேட்டான். அவள் தன் பெயரைக் கூறினாள். "அவர்கள் எல்லாம் அங்கிருக்கும்போது, நீங்கள் ஏன் அங்கில்லை?” என்று அவன் கேட்டான். அதற்கு அவள் சில சாக்குபோக்குகளைக் கூறினாள்.

83 அடுத்த நாள் இரவும் அவன் அவ்வண்ணமாகவே அவளை மீண்டும் காண அவன் காத்துக்கொண்டிருந்தான். எனவே அவன் அங்கேயே அமர்ந்து கொண்டிருந்தான். மற்றவர்களோ தொடர்ந்து நடனமாடிக்கொண்

டிருந்தனர். அவன் அந்த பட்டியின் வேலியின் மீது அமர்ந்து, அவள் பாத்திரம் கழுவின தண்ணீரை வெளியே உற்ற வருவாள் என்று காத்துக் கொண்டிருந்தான். அவன் அவளைக் கவனித்துப் பார்த்தான். அவள் வந்த போது அவன் அவளை அணுகி, "நான் இங்கு வந்திருப்பதன் உண்மையான நோக்கம் என்னவென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

அவள் "இல்லை ஐயா. எனக்குத் தெரியாது" என்று பதிலுரைத்தாள்.

84 அவன், "மனைவியைக் கொள் வதற்காக நான் இங்கு வந்துள்ளேன். உன்னில் காணப்படும் நற்பண்பு அவர் களிடம் இல்லை" என்றான். அப்பொழுது நான் என் சபையைக் குறித்து நினைத் துக்கொண்டிருந்தேன். நீங்கள்

பாருங்கள். எனவே அவன், “நீ என்னை விவாகம் செய்து கொள்வாயா?” என்று கேட்டான்.

அதற்கு அவள், "நானா? என்னையா? என்னால் அப்படிப்பட்ட ஒரு காரியத்தைக் குறித்து நினைத்துக்கூட பார்க்க முடியாதே” என்றாள்.

85 பாருங்கள்? அவன் முதலாளி யின் மகன். நாட்டிலுள்ள அநேக நிறுவனங்களும், நிலங்களும் அவனுக் குச் சொந்தமானவை. நீங்கள் பாருங் கள். அப்பொழுது அப்பெண்ணிடம் அவன், "ஆம் உன்னைத் தான் கேட்கிறேன்” என்றான். மேலும் அவன், "என்னால் ஒரு நல்லப் பெண்ணைக் கூட சிக்காகோ பட்டிணத்தில் காண முடியவில்லை. எனக்கு ஒரு உண்மை யான மனைவி வேண்டும். எனக்கு

நற்பண்புகொண்ட ஒரு மனைவி தேவை. நான் அதைத்தான் தேடிக் கொண்டிருந்தபோது, நான் அதை உனக்குள்ளாக கண்டேன்" என்று கூறினான். மீண்டும், "நீ என்னை மணந்து கொள்வாயா?" என்றான்.

அவள், "நல்லது..." என்றாள். அது அவளை திடுக்கிடச் செய்தது. அப்பொழுது அவள், "சரி" என்றாள்.

86 அப்பொழுது அவன், "நல்லது... நான் மீண்டும் திரும்பி வருவேன்" என்று அவன் அவளிடத்தில் கூறினான். மேலும் அவன், "நீ ஆயத்தமாயிரு. சரியாக ஒரு வருடம் கழித்து நான் திரும்பவும் வந்து உன்னை நிச்சயம் இங்கிருந்து அழைத்துச் செல்வேன். அதன் பின்பு நீ இவ்விதம் உழைக்க வேண்டிய அவசியமில்லை. உன்னை

நான் அழைத்துச் செல்வேன். நான் சிக்காகோவுக்குச் சென்று, நீ ஒருபோதும் என்றுமே கண்டிராத ஒரு வீட்டை உனக்குக் கட்டி தருவேன்" என்றான்.

87 அதற்கு அவளோ, "எனக்கு வீடு என்ற ஒன்று எப்போதும் இருந்ததில்லை. நான் ஒரு அனாதை" என்றாள்.

88 "நான் உனக்கு ஒரு நல்ல வீட்டைக் கட்டித்தருவேன். நான் திரும்ப வருவேன்" என்றான்.

89 அந்த ஒரு வருடத்தில் அவன் அவளைக் குறித்து கவனித்துக் கொண்டே வந்தான். கலியாண உடை வாங்குவதற்கென அவளால் முடிந்தவரை அவள் சம்பாதித்த பணத்தை சேமித்து வைத்தாள்.

சபைக்கு ஒரு பரிபூரணமான எடுத்துக்காட்டு. பார்த்தீர்களா? புரிகிறதா? அதன்பின்னர் அவள் தன்னுடைய கலியாண வஸ்திரத்தை ஆயத்தப்படுத்தினாள்.

90 அவள் அந்த கலியாண வஸ்திரத்தை அவர்கள் அறிய காண்பித்தபோது, அதைக் கண்ட அந்தப் பெண்கள், "நீயோ பரம ஏழை, முட்டாள்தனமான பெண்ணே, பெரிய அந்தஸ்து உள்ள அப்படிப்பட்ட ஒரு மனிதன் உன்னைக் கலியாணம் செய்துகொள்வான் என்று நீ எண்ணிக்கொண்டிருக்கிறாயா” என்று கூறினர்.

91 அவளோ, “அவர் எனக்கு வாக்கு கொடுத்திருக்கிறார்” என்றாள் ஆமென். மேலும், “அவர் வாக்களித்திருக்கிறார்.

அவருடைய வார்த்தையை நான் விசுவாசிக்கிறேன்” என்றாள்.

92 (அவர்களோ), “ஓ, அவன் உன்னை முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் யாரையாவது பெறுவானென் றால், அவர்களில் ஒருவளையே அவன் பெற்றிருப்பான்” என்றார்கள்.

93 அவளோ “ஆம், அவர் எனக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். நான் அதற் காகவே காத்திருக்கிறேன்” என்றாள். ஆமென். நானுங்கூட காத்திருக்கிறேன்.

94 ஆகவே, நாட்கள் சென்று கொண்டேயிருந்தன. கடைசியாக அந்த நாள் வந்தது. ஒரு குறிப்பிட்ட தருணத் தில் அங்கு வருவதாக அவன் கூறியிருந் தான். அவள் கலியான உடை உடுத்திக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்

தாள். அவனுடைய வருகையைக் குறித்து அவனிடத்திலிருந்து அவள் வேறெந்த வழியிலும் கேள்விப்பட வில்லை. ஆயினும் அவன் நிச்சயம் வருவானென்று அவள் அறிந்திருந்தாள். எனவே, கலியாண வஸ்திரம் தரித்துக் கொண்டு, அவள் அவனுடன் செல்ல ஆயத்தமானாள்.

95 அப்பொழுது அதைக் கண்ட அந்தப் பெண்கள் அவளைப் பார்த்து நகைத்தனர். ஏனெனில், அந்த முதலாளி. அந்த தொழிலாளர் மேன்முறையாளருக்கு ஒரு வார்த்தையும்... அல்லது அந்தப் பெண்களால் ஒருவருக்குங்கூட அதைக் குறித்து ஒன்றும் தெரியாதிருந்தது. ஆகவே அது அவர்களுக்கு மர்ம

மாகவே இருந்தது. அது அப்படித்தான். நிச்சயமாகவே அது இரகசியமாகும்.

96 ஆனால் அந்தப் பெண்ணோ அவன் நிச்சயம் வருவதாகச் சொன்ன அந்த வாக்குத்தத்தின் பேரில் சார்ந் திருந்து அவனுக்காகக் காத்திருந்தாள்.

97 ஆகவே, அவர்கள் அவளைப் பார்த்து நகைக்க ஆரம்பித்தனர். அவர்கள் அவளைச் சுற்றி இவ்விதமாக தங்கள் கரங்களைக் கோர்த்துக் கொண்டு, “ஹ!” என்று நடனமாடி நகைத்தனர். “பாவம், முட்டாள்தனமான ஒரு பெண்” என்றனர்.

98 அவள் அங்கேயே உறுதியாய் நின்றாள். அதற்காக எந்த அவமான உணர்வும் அவளிடம் சிறிதளவும் இல்லை. அவள் மலர்களை தன்

கரங்களில் ஏந்திக் கொண்டிருந்தாள். அவளுடைய கலியாண வஸ்திரம் அவளுக்கு பொருத்தமாக பொருந்தி யிருந்தது; அவன் வருகைக்காக அவள் துடித்துக் கொண்டிருந்தாள். “அவரு டைய மணவாட்டி தன்னை ஆயத்தப் படுத்தினாள்.” பாருங்கள்? அவள் அந்த மலர்களை தொடர்ந்து ஏந்திக்கொண்டு காத்திருந்தாள்.

99 அவர்கள் “இப்பொழுது, அது தவறு என்று நாங்கள் சொல்ல வில்லையா? பார், அவன் வரமாட்டான்” என்றனர்.

அவள், “இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் உள்ளன. அவர் நிச்சயம் வந்து விடுவார்” என்று உறுதியாகக் கூறினாள்.

ஓ, அவர்கள் அவளை மிகவும் கேலி செய்து நகைத்தனர்.

100 ஆகவே அந்த நேரத்தில் அந்த பழைய கடிகாரமானது ஐந்து நிமிடங்கள் ஆனதைக் காட்டியது. குதிரைகள் நாலுகாற் பாய்ச்சலில் ஓடிவந்ததை அவர்கள் கேட்டனர். சக்கரங்களின் கீழிருந்து புழுதியைக் கிளப்பிற்று. குதிரைகள் இழுத்துகொண்டு வந்த வண்டியோ வந்து நின்றது.

101 அதைக் கண்டவுடன் அவள் குதித்தெழுந்து ஓடினாள். அவனும் வண்டியிலிருந்து கீழே குதித்தான். அவள் அவனுடைய கரங்களில் கட்டி அணைக்கப்பட்டாள். அவன், “தேனே, எல்லாம் முடிவடைந்தது” என்றான். அவள் தன் சொந்தக்காரப் பெண்களை, பழைய ஸ்தாபனங்களை விட்டு விட்டு

அவனுடன் அவனுடைய சிக்காகோவை அடைந்தாள். அந்தப் பெண்கள் ஏமாற்ற மடைந்து அவளையே நோக்கி கொண் டிருந்தனர்.

102 இத்தகைய வேறொரு மகத்தான வாக்குத்தத்தத்தை நானறிவேன். “உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் மறுபடியும் வந்து உங்களைச் சேர்த்துக் கொள்வேன்.” நாமெல்லாரும் பைத்தியக் காரர் என்று அவர்கள் கூறலாம். ஆனால் சகோதரனே, என்னைப் பொருத்தவரை அந்த சமயம் நெருங்கி விட்டது. இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் இந்த முத்திரைகள் உடை வதைக் காணும்போது, சமயம் கடந்து காலமாகிய கடிகாரம் "டிக், டிக்” என்று அடித்து நேரமானது நித்தியத்திற்குள்

கடந்து செல்வதை ஏறக்குறைய என்னால் கேட்கமுடிகின்றது. ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன் நின்று கொண்டு, "இனி காலம் செல்லாது" என்று சொல்வதை என்னால் காண முடிகிறது. அவருக்கு உண்மை யாயிருந்த அந்த சிறு மணவாட்டி, வரப்போகும் ஒரு நாளில் பறந்து சென்று இயேசுவின் கரங்களையடைவாள். அப்பொழுது அவர் அவளை தம் பிதாவின் வீட்டிற்கு கொண்டு செல்வார். இப்பொழுது நாம் தொடர்ந்து செல்லு கையில், இக்காரியங்களை நாம் நினைப்போமாக.

# அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம்பண்ணினாள்

1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து